JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | **554/2019** |
| Deposition of witness for | **P.W. 3** | Prosecution /Defence / Court | |
| Name | வினோத் | Village | பென்னாகரம், தர்மபுரி |
| Father's Name | மாரப்பன் | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 03.02.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு வெங்கப்பள்ளியில் ஒரு தனியார் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் வேலை தேடிக் கொண்டிருந்தேன். அ.சா.1 சத்யபிரகாஷ் என் மாமா ஆவார். சம்பவ சமயத்தில் நானும், அ.சா.1 சத்யபிரகாஷ்ம் என் அண்ணா சிவக்குமார் வீட்டில் பிடாரியூரில் தங்கி இருந்தோம். அ.சா.1 பெருந்துறை இன்பிரா டெக்ஸ்க்கு பேருந்தில் வேலைக்கு சென்று வருவார். 07.06.2015 ம் தேதி மாலை 6– 6.30 மணி இருக்கும், பெருந்துறை புது பேருந்து நிலையத்தில் அரசுப் பேருந்து C5 என் பேருந்தில் பயணித்து வந்து இறங்கி நின்று கொண்டிருந்த போது மேற்படி பேருந்து ரிவர்ஸ் எடுத்து வந்து அ.சா.1 சத்யபிரகாஷ் மீது மோதியதில் கீழே விழுந்து அவரது காலில் அடிபட்டு விட்டது என என் அண்ணன் சிவக்குமார் கூறினார்.

2. அ.சா.1 யை சேர்த்திருப்பதாக கூறியதின் பேரில் நான் பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு வந்து அ.சா.1 சத்ய பிரகாஷை பார்த்தேன். அ.சா.1 ற்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. அதன் பின்னர் நானும், எனது அண்ணன் சிவக்குமாரும் சம்பவம் நடந்த இடமான பெருந்துறை புதிய பேருந்து நிலையத்திற்கு 08.06.2015 ம் தேதி மாலை 5.45 – 6.00 மணியளவில் சென்ற போது பெருந்துறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்தை பார்த்து படம் வரைந்து

பார்வை மகஜர் தயார் செய்ததில் என் அண்ணன் சிவக்குமார் முதலாவதாகவும் நான் இரண்டாவதாகவும், சாட்சி கையொப்பங்களை செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னை பெருந்துறை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அ.சா.2 செல்வம் எனக்கு அத்தை மகன் ஆவார். சாட்சி குமார் அ.சா.2 ன் ஓனர் ஆவார். விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் தயாரித்த மாதிரி வரைபடத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். பெருந்துறை புதிய பேருந்து நிலையத்தில் ஒவ்வொரு டிராக்காக உள்ளது, டிராக்குக்குள் சம்பவம் நடந்ததாக போலீசார் குறித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். டிராக்கிற்கு இருபுறமும் கம்பி உள்ளது என்றால் சரியல்ல.

2. வரைபடம் வரைந்த போது பேருந்து அங்குஇருந்ததா என்றால் இல்லை. சம்பவம் எந்த இடத்தில் நடந்தது என்பதை போலீசார் எதை வைத்து குறித்துக் கொண்டார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் போலீசார் அழைத்துச் சென்று காண்பித்தார்கள். நான் கையெழுத்து செய்த பின்னிட்டு போலீசார் பெயர் விலாசத்தை வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றாலும், நான் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை

**அரசு தரப்பில் சாட்சி அ.சா. பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு அதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.**

**(எதிரி ஆஜரில் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 ன் படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது).**